## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (06.08.2022 முதல் 10.08.2022)

அறிக்கை எண்: 62/2022 தேதி: 05.08.2022

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31 °செ முதல் 35 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 26 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (06.08.2022 முதல் 10.08.2022)

| கடந்த வார வானிலை (02.08.2022 முதல் 04.08.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (06.08.2022 முதல் 10.08.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 02/08 | நாள்-2 03/08 | நாள்-3 04/08 | தேதி | நாள்-1 06/08 | நாள்-2 07/08 | நாள்-3 08/08 | நாள்-4 09/08 | நாள்-5 10/08 |
| 0 | 2.6 | 11.3 | மழை (மி.மீ.) | 2 | 2 | 0 | 0 | 0 |
| 35 | 33 | 31 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 36 | 36 | 36 | 36 |
| 26 | 26 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 27 | 27 | 27 |
| 8 | 6 | 8 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 4 | 4 |
| 81-67 | 74-72 | 100-76 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-40 | 70-40 | 60-40 | 60-40 | 60-40 |
| 4 | 9 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 6 | 6 | 8 |
| மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 06.08.2022 மற்றும் 07.08.2022 வரை தினமும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 °செ முதல் 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | | எதிர் வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் மழைக்கு முன்பாக அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்யவும். |
| | | சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து, தயார் செய்யவும். |
| | | சம்பா நெல்லினை நேரடி விதைப்பு முலம் பயிர் செய்ய சி.ஆர்.1009, ஆடுதுறை 50 மற்றும் ஆடுதுறை 51 இரகங்களை உகந்தது. |
| கால்நடைகள் | மாடு | கறவை மாடுகளின் மடி வீக்க நோயைக் கட்டுப்படுத்த பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு, மடியைக் கறப்பதற்க்கு முன்பும் பின்பும் சுத்தம் செய்யவும் |

## குறுஞ்செய்தி

அறுவடை நிலையில் உள்ள நெல்லினை மழைக்கு முன்பாக அறுவடை செய்யவும்.

**இயக்குநர்**